திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 6 சூன் - 08



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# எது பெரிது?

புலவர் க. தண்டபாணி
வீரசோழபுரம், கள்ளக்குறிச்சி

நல்வழியில் சேர்த்திட்ட ஆறு காசு
நவமணிக்கே ஒப்பாகும் பெருமை சூடும்.
அல்வழியில் சேர்த்திட்ட நூறு காசே
ஆலத்திற் கொப்பாகும். சிறுமை நாடும்
இல்லாதான் கொடுக்கின்றஆறு காசே
இமயத்திற் கொப்பாகும். பெருமை சூடும்.
செல்வந்தன் கொடுக்கின்றநூறு காசு
சில்லரைக்கே ஒப்பாகும். சிறுமை நாடும்.

வாய்மையினால் சேர்த்திட்ட ஆறு காசு
வானத்திற் கொப்பாகும். பெருமை சூடும்.
மாய்த்துவிடும் பொய்சேர்த்த நூறு காசு
மண்ணுக்கே ஒப்பாகும். சிறுமை நாடும்.
நோய்தீர்க்கும் சுக்கின்நீர் ஆறு காசு
நுதல்போல மேலிருக்கும். பெருமை சூடும்.
பாய்ந்தோடும் சாராயம் நூறு காசு
பாதம் போல் கீழிருக்கும். சிறுமை நாடும்.

கொடுப்பவரின் அன்புள்ள ஆறு காசு
கோடிக்கே ஒப்பாகும். பெருமை சூடும்.
தடுப்பவரின் அன்பில்லா நூறு காசு
தகரத்துக் கொப்பாகும். சிறுமை நாடும்.
எடுத்தெடுத்து படித்தறிந்த ஆறு நூல்கள்
இல்லிருந்தால் பொன்னாகும். பெருமை சூடும்.
எடுக்காத படிக்காத நூறு நூல்கள்
இல்லிருந்தால் பொன்னாகும். பெருமை சூடும்.
எடுக்காத படிக்காத நூறு நூல்கள்
இல்லிருந்தால் என்னபயன்? குப்பை தானே.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 6
சூன் 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**தலைவர்**
மன்னர் **நா.குமரன் சேதுபதி**
இராமநாதபுரம்

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


எது பெரிது — புலவர் க.தண்டபாணி — 210

இதழ்மணம் — 213

நூல் மதிப்புரை — இரா.அழகுமலை — 214

மாண்மிக்க மருதிருவர் — முனைவர் க.சின்னப்பா — 215

தமிழ் மன்னர்களின் ஒற்றுமைக்குறைவால் ஏற்பட்ட சீரழிவுகள் — முனைவர் கூ. முத்தன் — 225

மகளிரின் மறமேம்பாடு — ர.தமிழரசி — 237

திருக்குறளில் கருத்தியல் போர் — பேராசிரியர் கருவை பழனிசாமி — 243

வாசகர் வாசகம் — 250

# இதழ் மணம்

இவ்விதழின் நுழைவாக "எது பெரிது" என்னும் தலைப்பில் புலவர் க.தண்டபாணி அவர்கள் எழுதியுள்ள கவிதையானது நல்ல சிந்தனைத் தெறிப்பான கவிதையாக அமைந்துள்ளது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மதிப்புறு செயலர் திரு இரா.அழகுமலை அவர்கள் "உணர்வின் உந்தல்" என்னும் கவிதை நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார்கள். இது செந்தமிழ் இதழுக்கு அழகு சேர்க்கும் வகையில் உள்ளது.

அடுத்து செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் க.சின்னப்பா அவர்கள் எழுதியுள்ள "மானமிக்க மருதிருவர்" என்னும் அரிய கட்டுரை மருது பாண்டியர்கள் என அழைக்கப்பட்ட சிவகங்கைச் சீமையின் மாமன்னர்களான சின்னமருது, பெரிய மருது ஆகிய பெருமகனார்களது வீரச்சிறப்பினையும், ஆங்கிலேயருக்கு எதிராக தென்னாட்டில் வீரமுழக்கமிட்டு விடுதலைக்கு வித்திட்ட பாங்கினையும் விளக்குகிறது.

மேலும் பேரா. முனைவர் கூ.முத்தன் எழுதிய "தமிழ் மன்னர்களின் ஒற்றுமைக் குறைவால் ஏற்பட்ட சீரழிவுகள்" என்னும் கட்டுரை தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களிடையே இருந்த ஒற்றுமையின்மையையும், மொழி உணர்வு, இன உணர்வு இல்லாமல் அவர்களிடையே நிகழ்ந்த போர்களையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது. மன்னராட்சி காலத்தில் மட்டுமல்லாது, இன்றைய மக்களாட்சி காலத்திலும் மொழி, இனஉணர்வு இல்லாத நிலையை ஒப்பிட்டு உரைத்துள்ளது இக்கட்டுரை.

அடுத்ததாக "மகளிரின் மற மேம்பாடு" என்னும் தலைப்பில் ர.தமிழரசி அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் சங்க காலத்தில் பெண்களின் வீரச் சிறப்பை உணர்த்தி நிற்கிறது. அக்கால மகளிரின் வீர மேம்பாடு உணர்த்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

நிறைவாக "திருக்குறளில் கருத்தியல் போர்" என்னும் தலைப்பில் பேரா.கருவை பழனிசாமி அவர்கள் திருவள்ளுவரின் அறக்கருத்துக்களை ஒரு கருத்து ரீதியான போர் என்றே அணுகி உள்ளார். சமூகத் தீமைகளை உற்று நோக்கி, அவைகளைக் களைந்து தீர்ப்பதற்குரிய வள்ளுவரின் கருத்துக்களை ஒருவகை கருத்தியல் போராக தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# நூல் மதிப்புரை

இரா. அழகுமலை
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்

நூல் : **உணர்வின் உந்தல்**
ஆசிரியர் : திரு. இரா. மோகன்குமார்

திரு இரா. மோகன் குமார் அவர்களின், "**உணர்வின் உந்தல்**" என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேன்சுவைக் கவிதைகள். தான் ஒரு தலைசிறந்த கவிஞர் என்பதை இக்கவிதைகளின் வழி நிறுவியுள்ளார் ஆசிரியர்.

**"குருடன் கை ஓவியம் போல
தமிழ் மொழியை ஆக்கியுள்ளோம்"**

என்று தன்னடக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**"யானையின் மதம்
புத்தியில் மாற்றும்
மனிதனுள் மதம் - வாழ்க்கைப்
பாதையில் மாற்றும்"**

சொல் மாற்றங்கள் இக்கவிதையை அழகு செய்கின்றன.

**"பேச்சாளரின் இறுதி ஊர்வலம்
பேசாமல் வாருங்கள்"**

புதுக்கவிதைக்கேயுரிய எள்ளல் சுவையை மிகுவிக்கும் கவிதை இது.

**"அவர் இலஞ்சம் வாங்கினாரா
நான் நம்பவில்லை
ஏன்?
அவர் அவ்வளவு குறைவாக வாங்கமாட்டார்"**

இலஞ்சம் வாங்கும் வஞ்சகர்களுக்குச் சவுக்கடி கொடுக்கும் கவிதையாக இது அமைந்துள்ளது.

குறும்பாவாக, ஹைகூவாக அமைந்த கவிதைகள் யாவும் சொல் நயமும், பொருட்சிறப்பும், கவிதை ஆற்றலும் நிறைந்த இந்நூற் கவிதைகள் யாவும், திரு இரா. மோகன்குமார் அவர்களின் படைப்புலகில் ஒரு மணிமகுடமாகத் திகழ்கிறது.

# மானமிக்க மருதிருவர்

முனைவர். க.சின்னப்பா
முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி

உணவைவிட, உடையைவிட, பொருளைவிட, நிலங்களைவிட, சிற்பம், ஓவியம் முதலிய கலைகளைவிட உயர்ந்தது சுதந்திரம். இத்தகைய இணையில்லா மதிப்புடைய மனித சுதந்திரம் என்னும் மாணிக்கத்தைக் காப்பாற்ற நான் எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருக்கிறேன் என்றார் அறிஞர் இங்கர்சால். அதே போன்று இந்திய விடுதலைப் போரில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அந்நிய ஆட்சியில் அரசனாய் இருப்பதை விட சொந்த ஆட்சியில் சேவகனாய் இருப்பது மேல் என்று குறிப்பிட்டார்.

ஆங்கில ஏகாதிபத்திய அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெறத் தங்கள் இன்னுயிரைக் கொடுத்தவர்கள் பலர். ஆங்கிலேயர்களின் பீரங்கிக் குண்டுகளுக்குப் பலியானவர்கள் பலர். தூக்குக் கயிற்றை முத்தமிட்டுப் பலிபீடத்திலே துடிதுடிக்க உயிரை விட்ட உத்தமத் தியாகிகள் பலர். அந்தத் தியாகச் செம்மல்களின் வரிசையில், விடுதலைப்புரட்சி என்னும் வேள்விச்சுடரை ஏற்றியவர்கள் பட்டியலில் தமிழ்நாட்டில் சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த வீர மருதுபாண்டியர்கள் முதலிடம் பெறுகின்றனர். தென்னகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில், சிவகங்கைச்சீமையில் பெரியமருது, சின்னமருது என்றழைக்கப்படும் அந்த வீர மறவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக, இந்திய விடுதலைக்கு முதன்முதலில் வீரமுழக்கம் செய்து, தங்களது எதிர்ப்பைக் காட்டி, இடர்களையும், இன்னல்களையும் ஏற்றுப் போராடி தூக்குக் கயிற்றிலே தொங்கி வீரமரணம் அடைந்தனர். அந்த விடுதலைக்கு வித்திட்ட மறவர்களின் வீர வரலாற்றை அறிந்து கொள்வது இந்தியத் திருநாட்டில் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

**விடுதலைக்கு வித்திட்டவர்கள்**

ஆங்கிலேயரின் அதிக வரி வசூலாலும் கொள்ளை வணிகத்தாலும் மக்கள் மிகவும் அல்லலுற்றனர். அரசியல் பொருளாதாரச் சிக்கல்களுடன் சமுதாய, சமயக் கோட்பாடுகளும் தமிழக மக்களைத் துன்புறுத்தின. மக்கள் தங்களது சமுதாய விழாக்களையும், உரிமைகளையும் செயல்படுத்தவிடாது ஆங்கிலேயர்கள் தடுத்தனர். எனவே மக்களும், பாளையக்காரர்களும் ஒன்றாக இணைந்து ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கத்தை எதிர்க்க முற்பட்டனர். இவ்வாறான துன்புறுத்தல்களால் தென்னிந்தியப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய மருதுபாண்டியர், ஆங்கிலேயரை முதன்முதலில் எதிர்த்த கட்டபொம்மன் மற்றும் முகவையம்பதியில் கிழவன்சேதுபதி, ரெபல் முத்துராமலிங்க சேதுபதி, நெற்கட்டுஞ்–சேவலில் பூலித்தேவன் போன்றோர் தென்னாட்டின் விடுதலைப் போருக்கு அடிக்கல் நாட்டி, விடுதலைப் புரட்சித் தீயை மக்களிடம் கொழுந்துவிட்டெறியச் செய்து, விடுதலைப் போரைத் தொடங்கி வைத்த வீரச் செம்மல்களாவர்.

18–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிவகங்கைச் சீமையின் வரலாறு பெருமை மிக்க வரலாறாக அமைந்தது. தமிழகத்தில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்த்த அப்பகுதியின் தலைமைப் பீடம் காளையார்கோயிலாக இருந்தது. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தமிழகப் புரட்சியின் உண்மையான தலைவர் சின்னமருது ஆவார். அவரது மூத்த சகோதரர் வெள்ளைமருது என்ற பெரிய மருது வரலாற்றுப் புகழ்பெற்றவர். தமிழகத்தின் விடுதலைப் போரை தொடங்கிவைத்த மருதிருவர் பற்றிச் சிவகங்கை, காளையார் கோயில், நரிக்குடி, சிறுவயல், முத்தூர் ஆகிய ஊர்கள் இவர்களின் புகழுக்கு அடையாளங்களாக இன்றும் மிளிர்கின்றன.

**வீரத்தின் வித்து மருதிருவர்**

சிவகங்கை அரசர் முத்துவடுகநாத பெரிய உடையனத்தேவர்,

வேட்டையாடுவதில் மிக விருப்பம் கொண்டவர். அவர் அடிக்கடி காட்டிற்கு வேட்டையாடச் செல்வார். அச்சமயங்களிலெல்லாம் பெரிய மருதுவையும், சின்ன மருதுவையும் தவறாது காட்டிற்கு அழைத்துச் செல்வது வழக்கம். ஒரு சமயம் முத்துவடுகநாதரின் மீது புலியொன்று சீறிப் பாய்ந்தது. அதனிடம் சிக்கித் தவித்த அரசரை மருதிருவர் காப்பாற்றினர். உயிர் தப்பிய முத்துவடுகநாதர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இருவருக்கும் பரிசுகள் வழங்கி பதவி உயர்வும் கொடுத்தார். மருது சகோதரர்கள் இருவரும் சேனையின் தளகர்த்தர்கள் ஆக்கப்பட்டனர். அதன் பின்னர் சிவகங்கையின் சேனை சிறந்து விளங்கியது.

அந்நாளில் வீரதீரம் மிக்கவர்களையும் அரும் பெருஞ்செயல் செய்தவர்களையும் பாண்டியர்கள் என்று அடைமொழியிட்டு அழைப்பது வழக்கம். பெரியமருதுவும், சின்னமருதுவும் வேங்கைப் புலியினைக் கொன்று சிவகங்கை அரசைக் காப்பாற்றியதால் அதுமுதல் மருதுபாண்டியர் எனும் சிறப்புப் பெயர் பெற்றனர். மருதுபாண்டியர்களது அறிவும், ஆற்றலும் தமிழகம் எங்கும் பரவின. 'வளரி' என்பது அக்காலத்தில் எதிரியை வீழ்த்த உபயோகிக்கப்பட்ட ஒரு மர ஆயுதமாகும். ஒருவர் வளரிக் கம்பினை எதிரியின் மேல் எறிந்தால் அது எதிரியைத் தாக்கி அவரை வீழ்த்திவிட்டு, மீண்டும் எறிந்த நபரிடமே திரும்பி வரும் இயல்புடையது. இராமபிரானது இராமபாணம் போல் புறப்பட்ட இலக்கை அடித்துவிட்டு மீண்டும் இருந்த இடத்திற்கே வந்துவிடுவது இராமபாணத்தின் சிறப்பு. அச்சமயத்தில் வளரியை எறிந்தவர் மிகுந்த கவனத்தோடு அதனை மீண்டும் கையில் பிடிக்க வேண்டும். சிறிது மாறினாலும் எறிந்த நபரையே தாக்கி வீழ்த்தும் அமைப்புக் கொண்டது. இத்தகைய பயங்கரமான ஆயுதத்தை திறமையாகக் கையாள்வதில் மருதுபாண்டியர் இருவரும் மிகச்சிறந்த பயிற்சி பெற்றிருந்தார்கள். பெரிய மருது ஓடுகின்ற முயலைக்கூட வளரிக்கம்பால்

அடித்துவிடுவார் என்று ஆங்கிலக்கும்பினிப் படைத்தளபதி மேஜர் ஜேம்ஸ்வேல்ஷ் மருதுவின் வளரி வீச்சுத் திறமையைப் பாராட்டி வியந்து கூறியுள்ளார்.

**ஆட்சியும் நிர்வாகமும்**

ராணி வேலுநாச்சியார் தனது கணவர் முத்துவடுகநாதரை இழந்துவிட்டதாலும் இளவரசி வெள்ளச்சி நாச்சியார் இளம் வயதினராக இருந்தாலும், உயர்குடிப் பிறந்த அரசகுலப்பெண்கள் தாங்கள் அரசாட்சி செய்வதற்குத் தங்களை அதில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை அரசமரபில் நிலவியது. எனவே சிவகங்கைச்சீமை நிர்வாகத்தை மருது சகோதரர்கள் ஏற்றனர். வேலுநாச்சியார், வெள்ளச்சி நாச்சியார், வேங்கை பெரிய உடையனத் தேவர் முதலியோர் சிவகங்கையை ஆட்சி செய்த காலங்களில் அவர்கள் சட்ட முறையிலான ஆட்சியாளர்களாகவும், மருது சகோதரர்கள் நடைமுறை ஆட்சியாளர்களாகவும் விளங்கினார்கள்.

மருதுபாண்டியர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். மருது சகோதரர்கள் தமக்கு ஆண்டவனும் ராணியும் அளித்த பெரும் பொறுப்பான கட்டளை என்று கருதினர். நிர்வாகத்தில் சிறந்த அறிவும் ஆட்சித் திறனுமுடைய சின்ன மருதுவே நாட்டின் நிர்வாகப் பொறுப்பைத் திறம்பட நடத்திவந்தார். அவர் குடிமக்களின் உள்ளம் கோணாமல் நடந்துவந்ததோடு நாட்டு மக்களின் நலன்களைத் தாயெனக் கவனித்து வந்தார். பெரியமருதுவோ வழக்கம்போல் வீரர்களுடன் அடிக்கடி காட்டுக்குச் சென்று வேட்டையாடுவதில் ஈடுபட்டுக் காட்டு மன்னனாகவே இருந்தார். ஆனால் நெருக்கடியான காலக்கட்டங்களில் சின்னமருதுவுக்கு உறுதுணையாக இருந்து மிகப் பொறுப்புடன் செயல்பட்டு வந்திருக்கிறார்.

மருதுபாண்டியர்கள் நிர்வாகப் பொறுப்பு ஏற்றதும் நாட்டில் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. தங்களது முதற்கடமையாக நவாப்புக்குக் கட்ட வேண்டிய வரிப்பணம் பற்றிச் சிந்தித்தனர்.

வெளிப்படையான தோற்றமுள்ள ஒரு பரந்த வளமிக்க நாட்டிற்குச் சின்னமருது அதிபதியாக இருந்தார். அவரது இருப்பிடம் சிறுவயலாகும். அவர் கருத்த மேனியாய். காண்பதற்கழகாய், பழகுவதற்குப் பண்பாளராய் இரக்க குணங்கள் கொண்ட இனியவராய், எவரும் எளிதில் சந்திக்கக் கூடியவராய் விளங்கினார். ஆட்சிசெய்யும் குடிமக்களுக்கு, அவரது தலை அசைப்பே சட்டமாக கருதப்பட்டது. தனது சொந்தப் பாதுகாப்பிற்கு ஒரு தனிப் பாதுகாவலர் கூட வைத்துக் கொள்ளாமல், அவர் ஒரு திறந்த அரண்மனையில் வாழ்ந்து வந்தார். அவரை யாரும் எப்பொழுதும் சந்தித்துப் பேசிவிட்டுப் போவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அவரைக் குடிமக்கள் தங்கள் தந்தையாகக் கருதினர் என்று இராணுவத் தளபதி ஜேம்ஸ் வெல்ஷ் எழுதிய ராணுவக் குறிப்புக்கள் என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

**திருப்பணிகள் கண்ட திருவாளர்கள்**

சிவகங்கை சீமையின் நிர்வாகம் தங்கள் கரங்களில் கிட்டியதும் மருதுபாண்டியர் மக்கள் நல்வாழ்வுத் திட்டப்பணிகளைத் துவக்கினர். அவர்கள் தங்களால் ஆன அறப்பணிகளைச் செய்தனர். இருபது ஆண்டுகளில் இவர்கள் ஆற்றிய இறைப்பணிகளும் மக்களுக்கு ஆற்றிய அறப்பணிகளும் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.

மருதுபாண்டியர்கள் சிவகங்கையில் திருஞான சுப்பிரமணியர் கோயில் என்னும் ஓர் ஆலயத்தைக் கட்டினர். அக்கோயிலை அவர்கள் கட்டியதற்குக் காரணம், சிவகங்கை அரசர் முத்துவடுகநாதருக்குக் குழந்தைச் செல்வம் பிறந்தால் ஓர் ஆலயம் உருவாக்குவதாக மருது சகோதரர்கள் கடவுளை வேண்டிக் கொண்டனர். அரசர் முத்துவடுகநாதரின் இறுதி நாட்களில் அவருக்கு ஒரு பெண் மகவு பிறந்தது.

அப்போது ஆங்கிலேயர்களுடன் ஏற்பட்ட போரில் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார். எனினும் அவருடைய கோரிக்கையை நிறைவேற்றவே மருதுபாண்டியர்கள், அக்கோயிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது.

இலக்கியங்களில் திருக்கானப்பேர் என்ற பெயர் கொண்ட காளையார் கோயில் வரலாற்றுச் சிறப்புடையது; இக்கோயில் 9–ஆம் நூற்றாண்டில் வீரசேன பாண்டிய மன்னர் என்பவரால் எடுத்துக் கட்டப்பட்டது. இவ்வாலயம் அதற்கு மிகத் தொன்மை வாய்ந்தது. பன்னிரண்டாம் திருமுறைகளில் இக்கோயில் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளன. அப்பர், சுந்தரர், சம்பந்தர், அருணகிரிநாதர் போன்ற சைவ பெரியார்களும், பொய்யாமொழிப்புலவர், சிவாச்சாரியார் போன்ற புலவர்களாலும் வணங்கிப் பாடப்பெற்ற புண்ணியத் திருத்தலமிது. இத்தகைய வரலாற்றச் சிறப்புமிக்க காளையார் கோயிலின் தென்புற ராஜகோபுரத்தை பெரியமருது கட்டினார்.

**"கருமலையில் கல்லெடுத்து**
**காளையார் கோவில் உண்டுபண்ணி**
**மதுரைக் கோபுரம் தெரியக் கட்டிய**
**மருதுவாரதைப் பாருங்கடி"**

என்று இக்கோயில் கட்டப்பெற்ற வரலாற்றைக் காளையார்கோயில் பகுதியில் பாடலொன்று இன்றும் நயம்பட எடுத்துரைக்கின்றது. பெரியமருது மதுரை மீனாட்சி அம்மன் சன்னதியில் இரண்டு திருவாட்சி விளக்குகளைச் செய்து காணிக்கையாக வழங்கினார். இதில் நெய் வார்க்க ஆவியூர் என்னும் கிராமத்தைக் கோயிலுக்கு மானியமாகக் கொடுத்தார்.

**சமத்துவ நாயகர்கள்**

சைவசமயக் கோயில்களுக்கு மட்டுமன்றி, மருதிருவர் வைணவக் கோயில்களுக்கும் தர்மக் கைங்கரியங்கள் செய்துள்ளனர். திருக்கோஷ்டியூரில் எழுந்தருளியுள்ள சௌமிய மாதவப் பெருமாளுக்குக் கோயில் தேரும், அவ்வூரில் திருக்குளம் ஒன்றும் மருது கட்டுவித்தார். ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலுக்கு பெரியமருது தேர் ஒன்று செய்து வழங்கினார். திருவாடானை வட்டம் கலியநகரியில் மருது ஒரு சத்திரம் கட்டினார். வடஇந்தியாவிலுள்ள காசியிலிருந்து – இராமேசுவரத்திற்கு திருத்தல யாத்திரை வரும் புனிதப் பயணிகள்,

இச்சத்திரத்தில் தங்கி ஒய்வெடுத்து உணவருந்திப் பின் பயணத்தைத் தொடர எல்லா வசதிகளும் இச்சத்திரத்தில் மருதுபாண்டியரால் செய்து தரப்பட்டிருந்தன.

நெற்குப்பையிலுள்ள மருதீசுவரர் கோயிலுக்கு நந்தி சிலையொன்று செய்து பெரியமருது வழங்கியுள்ளார். நரிக்குடியில் ஒரு சத்திரம் மற்றும் ஊரணி, ஆனந்தவிநாயகர் கோயில் ஆகியனவற்றையும் சிறப்பான முறையில் மருது சகோதரர்கள் உருவாக்கினர். இச்சத்திரத்தில் ஏழைகள் வந்து தங்கி இலவசமாக உணவுண்டு செல்வதற்கு வேண்டிய வசதிகளை பெரியமருது செய்திருந்தார். ஆண்டுதோறும் இச்சங்கத்தின் சார்பில் அவ்வூர் ஆண்டவருக்கு திருவிழா நடத்த ஏற்பாடு செய்தார். அச்சத்திரத்தின் சார்பில் அறக்கொடைப்பணியும் இறைவழிபாடும் எவ்விதமான இடர்பாடுமின்றி சிறப்பான முறையில் இன்றும் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கைச் சீமையில் மருதுபாண்டியர்களால், மக்களின் நன்மைக்காக ஏராளமான குளங்களும், ஊரணிகளும் உருவாக்கப்பட்டது. சிவகங்கையில் தம் அன்னையின் பெயரால் பொன்னாத்தாள் குளம் என்ற குளத்தையும், தந்தை பெயரால் உடையார் சேர்வை ஊரணி என்ற ஊரணியையும் மருது சகோதரர்கள் உருவாக்கினர். இந்த இரண்டு தடாகங்களும் மருதுபாண்டியர் தமது தாய் தந்தை மீது கொண்ட பேரன்பின் நினைவாக உருவாக்கப்பட்ட பெருங்குளங்கள் ஆகும்.

மருது இந்து சமயத்திற்கு மட்டுமின்றி, ஏனைய பிற சமயங்களுக்கும் அருட்கொடைகள் வழங்கியுள்ளார். நரிக்குடியில் மருது ஒரு மசூதி கட்டி, அதை மேற்பார்வையிட முத்துக்கருப்பன் சேர்வை என்பவரை நியமித்தார். சருகணியில் ஒரு கிறித்துவ தேவாலயம் உருவானபோது, சருகணி கிராமத்தையே அந்தத் தேவாலயத்திற்கு மானியமாக மருது வழங்கியதாக செப்புப்பட்டயம் ஒன்று குறிப்பிடுகிறது. இதுமட்டுமல்லாது ஒரு தேரும் செய்து வழங்கியுள்ளார். ஒரு மனிதனை இன்னொருவரிடமிருந்து

பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப்பதுதான் அவற்றின் நோக்கம் என்ற தாந்தேயின் கருத்துக்கேற்ப, பெரியமருது எம்மதத்தையும் சம்மதமாகப் பாவித்து அருட்கொடைகள் வழங்கினார்.

**புலவர்களும் மருதுபாண்டியர்களும்**

வீரத்தால் ஏற்படுகின்ற புகழ் மற்ற எல்லாப் புகழ்களையும் விட உயர்ந்தது என்ற கருத்திற்கு ஏற்ப, வீரவாளேந்தும் வெற்றிக் கரங்களையுடைய வேந்தராம் மருதரசர் பற்றிக் கவிவாணர்கள் பலர் சிவகங்கையில் உள்ள அரண்மனையில் புகழ்ந்து பாடியுள்ளனர். கமுதி நாட்டுப் புலவர், சாந்துப் புலவர், சர்க்கரைப் புலவர், சவ்வரிசிப் புலவர், மதுரகவிராயர், கவிகுஞ்சரபாரதி, முத்துக்குட்டிப் புலவர், மாம்பழக் கவிராயர், இராமனுசக் கவிராயர், அருணாச்சலக் கவிராயர், நாராயண அவதானி, வில்லியப்பிள்ளை, குழந்தை கவிராயர், கந்தசாமிப் புலவர் முதலிய கவிவாணர்கள் தங்களது மிகச் சிறந்த கவிதைகளை மருதுவின் வீரம், புகழ் ஆகியவற்றைப் போற்றிப் பாடியுள்ளனர்.

> "பரனாரியன் புணரும் பன்றன்னின்பம்
> பரபாதியர் அறியாப் பண்பன் - விரனா
> ஏணி மருதுபாண்டில் விழுவன்று தைத்தோன் யாரும்
> பணி மருது பாண்டிய பூபன்"

என மருதுவைப் பற்றிச் சர்க்கரைப் புலவர் தமது கவியால் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மருதுவின் வேண்டுகோளுக்கிணங்க சாந்துப்புலவர் குன்றக்குடியில் குடிகொண்டுள்ள முருகப் பெருமானினைப் போற்றி மயூரகிரிக்கோவை எனும் பிரபந்த நூலை இயற்றிக் குன்றக்குடியில் அரங்கேற்றம் செய்தார். மருது பல பரிசுகள் வழங்கியதோடு மருதன்குடி கிராமத்தையும் சாந்துப்புலவருக்குப் பரிசாக வழங்கினார்.

பெரிய மருதுவும், சாந்துப்புலவரும் நெருங்கிய நண்பர்கள். இலக்கியத்தில் மட்டுமன்றி, போரிலும் சாந்துப்புலவர் உறுதுணையாய்

இருந்தார். இறுதியில் மருதிருவர் பகைவர்கள் கையில் சிக்கிவிட்டதை அறிந்து புலவர் மிகவும் மனம் வருந்தினார். அன்று பாரியைப் பிரிந்த கபிலர் மனமுடைந்து இறந்தது போல, சாந்துப் புலவரும் தனது உயிர் நண்பர்களைப் பிரிந்த ஏக்கத்தில் உடல்மெலிந்து உயிர் துறந்தார். மருது பாண்டியர்கள் அந்நியர் ஆதிக்கம் எழுப்பிய தடைக்கற்களுக்கு இடையிலும் கூட புலவர்களை ஆதரித்துப் போற்றினார்.

**வீரசங்கம் நிறுவல்**

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மனை இராமநாதபுரத்தில், கலெக்டர் ஜாக்ஸன் துரை நடத்திய விதமும், பாளையக்காரர்களை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி கொடுமைப்படுத்திய விதமும், மறவர் நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக வீரக்கனலை ஊட்டியது. 1772–ஆம் ஆண்டு சிவகங்கை ராஜா முத்துவடுகநாதர் கொல்லப்பட்டதற்குப் பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகம், சிவகங்கையின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வரியாகத் தங்களுக்குச் செலுத்திட வேண்டுமென்று வற்புறுத்தி வந்தது. இதற்குள் மருதுபாண்டியர்கள் வீரசங்கம் என்று ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். வீரசங்கம் என்ற அமைப்பு, ஆங்கிலேயர்களுக்கு எதிராக, விடுதலை வேட்கைகொண்ட வீரர்களால் உருவாக்கப்பட்டது. இதற்கென வட்டார அமைப்புக்களை ஒன்றாக இணைக்கும் பணியில் சின்ன மருது தீவிரமாக இறங்கினார். இராமநாதபுரத்தில், மயிலப்பன் சேர்வையும், முத்துக்கருப்பத் தேவரும் இந்த வீரசங்கம் அமைப்பதற்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றனர்.

**பரணிபாடிய மருதிருவர்**

கி.பி. 1801இல் சிவகங்கைக்கு வடக்கிலுள்ள ஒக்கூரில் மருதுபாண்டியர் படைகளும், தளபதி இனஸ்னுடைய படைகளும்

மோதிக் கொண்டன. ஆங்கிலக் கும்பினிப் படைகள் அங்கிருந்த வீடுகளுக்குத் தீவைத்து மக்களைக் கொள்ளையடித்துக் கொடுமைகள் செய்தன.

இந்த மண்ணிலே பிறந்தோம்; ஆனால் அந்நியன் துப்பாக்கிக்கு முன் அடிபணிய மாட்டோம் என சின்னமருது ஆர்ப்பரித்தார். துரோகமே உனக்கு பெயர்தான் தமிழ் இனமா? என்று பெரிய மருது நொந்து கொண்டார். வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள் எனப் போர்ப் பரணிபாடி மருதுபாண்டியர்கள் வீறுநடை போட்டனர்.

**நிறைவாக;**

மருதுபாண்டியர்கள் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகச் செம்மல்கள். மருது சகோதரர்களைத் தூக்கிலிட்டோரை உலகம் மறந்த செயல் வருத்தத்திற்குரியது. பெரியமருது கைது செய்யப்பட்டு ஆங்கிலேயர்களால் விசாரணை செய்யப்பட்டபோது பின்வருமாறு முழங்கினர். "ஒருநாள் எனது தாய்நாடு அந்நியமாயை ஒழிய அடிமை விலங்கை அறுத்தெறிந்து தலைநிமிரும்" என்றார். அவர் அன்று வழங்கிய தீர்க்கதரிசனக் கருத்து பின்னர் உண்மையில் மலர்ந்து இந்தியா விடுதலை பெற்றது.

மரணம் எந்தவிதமாகவும் வரலாம். ஆனால் காரணம் மட்டும் கௌரவம் உடையதாக இருக்க வேண்டும் என்று அலெக்ஸாண்டர் புஷ்கின் குறிப்பிடுவதைப் போல மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் தாய்நாட்டு விடுதலைக்கு நீதிகேட்டு கௌரவமான முறையில் மரணத்தைத் தழுவினர். மரணத்திற்குப் பின்னும் மனிதனுடன் கூடச் செல்லும் நண்பன் நீதிதான் என்று அரசியல் அறிஞர் மனு குறிப்பிடுகின்றார். மருதுபாண்டியர் நீதிக்காகப் போராடி வீர மரணத்தை ஏற்று விண்ணுலகெய்தினர். தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியுறுவதே மேல் என்று பிரௌனிங் என்ற அறிஞர் கூறுவது போல, உயர்ந்த இலட்சியத்திற்காக தூக்குக் கயிற்றை மருது சகோதரர்கள் ஏற்றனர்.

# தமிழ் மன்னர்களின் ஒற்றுமைக்குறைவால் ஏற்பட்ட சீரழிவுகள்

முனைவர் சு. முத்தன்
தேர்வுநிலை விரிவுரையாளர்
மதுரைக்கல்லூரி, மதுரை.

தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் பழமைச் சிறப்பை விளக்கும் அரிய வரலாற்றுக் கருவூலங்களாக விளங்குவன சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் மூலம் அக்கால மக்களின் பண்பாடுகள், மரபுகள், அரசர்களின் ஆட்சி முறைகள் போன்ற கூறுகளைக் காணமுடிகிறது. பெரும்பாலான அறிஞர்கள் இடையே சங்ககாலம் – (கி.மு. 2 முதல் கி.பி. 3 வரை) இக்காலம் பற்றி பல கருத்துப் பாகுபாடுகள் உண்டு, கி.மு. 3 முதல், கி.பி. 3 வரை, கி.மு. 3 முதல் கி.பி. 5 வரை என்று பல காலங்களைக் குறிப்பிடுகின்றனர்; ஒரு பொற்காலம் என்றே குறிப்பிடுகின்றனர். அவ்வளவிற்கு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் செல்வச் செழிப்பான காலத்தைக் காட்டி நிற்கின்றன. அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நீதிமுறை வழுவாது மக்கள் நலன் கருதி வாழ்ந்தனர் எனப் புறநானூறு, பதிற்றுப்பத்து, ஆற்றுப்படை நூல்கள் நமக்குத் தெளிவுறுத்துகின்றன. பேரரசர்கள் மட்டுமின்றி பல சிற்றரசர்களும் சிறப்புடன் ஆட்சி செய்தனர் என்பதனை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில் 'பெருஞ்சோற்று உதியன்' என்னும் சேரமன்னன் பாரதப் போரில் பாண்டவர் படைகளுக்கும் கௌரவர் படைகளுக்கும் உணவளித்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடபுலத்தில் வெற்றி வாகை சூடி இமயத்தில் தனது அரசு சின்னமாகிய வில்–அம்பைப் பொறித்தான். மேலும் இவன் 58 ஆண்டுகள் நீடித்த வளமான ஆட்சி செய்தான். சோழ மன்னர்களில்

சிறப்பான இடத்தினை வகிப்பவன் கரிகால்சோழன், இவன் வெண்ணிப்பறந்தலைப் போர், வாகைப்பறந்தலைப் போர் எனப் பல்வேறு போர்களில் வெற்றிவாகை சூடியவன். அவ்வாறே பிற்காலச் சோழர்களில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் போன்ற அரசர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்தனர். அவ்வாறே பாண்டிய மன்னர்களில் பழம் பெருமை வாய்ந்தவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. சங்ககாலப் பாண்டிய மன்னர்களுள் சிறப்பான இடத்தினை வகிப்பவன் முடத்திருமாறன். இவனே வைகைக்கரையில் மதுரை நகரை அமைத்தவன். அவ்வாறே பாண்டியர்களில் பல போர்களில் வெற்றிவாகை சூடி சிறப்பான ஆட்சி செய்தவர்களில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கானப்பேரெயில் வென்ற உக்கிரப் பெருவழுதி போன்றோர்கள் ஆவார். எனவே தமிழகத்தை ஆண்ட தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் பல்வேறு போர்களில் வெற்றி பெற்று மக்களுக்காகச் சிறப்பாக ஆட்சி செய்ததோடு, தன்னை நாடி வந்த புலவர்களுக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து உதவினர் என்ற செய்தியினை புறநானூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை போன்ற பல்வேறு இலக்கியங்கள் சான்றுபகர்கின்றன.

சீரும், சிறப்போடும் தமிழகத்தைத் தமிழ் மன்னர்கள் ஆண்ட போதும், இவர்கள் போரிட்டு வெற்றி பெற்றது என்பது தம் இனத்துக்குள்ளேயே என்பதனை இலக்கியங்களும் வரலாற்று ஆதாரங்களும் சான்று காட்டுகின்றன. முடியுடை வேந்தர் மூவரும் தம்முள் உறவாடியதைவிடப் பூசலிட்டுக் கொண்டதே மிகுதியென எண்ண வேண்டியுள்ளது. மூவேந்தர்கள் மட்டுமின்றி அன்றைய தமிழகத்தில் வாழ்ந்த ஏனைய குறுநில மன்னர்களும் வீரத்தின் பெயரால் ஒற்றுமையின்மையையே வளர்த்து வந்தனர். புறப்பாடல்கள் எதனை எடுத்தாலும் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. இவர்களுக்குள் மொழி உணர்வோ, இன உணர்வோ, ஏற்படவில்லை, போர் என்ற பெயரால் தன்மொழி பேசுகின்ற தன் இனத்து மக்களைக் கொன்று புகழ் பெற்றனர்.

புல்லாற்றூர் எயிற்றியனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார், ஔவையார் போன்ற சங்க காலத்துச் சான்றோர்கள் தமிழகத்தின் தலைவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையினையும் பகைமையுணர்ச்சியினையும் கண்டு மிகுந்த வேதனை கொண்டிருக்கின்றனர் என்பதனை புறநானூற்றுப்பாடல்வழி அறியலாம் (புறம் : 36, 44, 45, 46, 213, 367) இவ்வரசர்கள் மிக அருமையாக எப்போதேனும் ஓரிடத்து ஒருங்கிருக்க நேர்ந்தால், அவ்வாய்ப்பு அருமையினும் அருமையானதென்பதை உணர்ந்து உளம் களித்துள்ள ஔவையார் உவந்து வாழ்த்திப் பாடியிருக்கிறார். (புறம் – 367).

மூவேந்தரும் மூவேந்தராக இல்லாமல் ஒவ்வொருவருக்–குள்ளும் பகைமை கொண்டு போர் தொடுத்து வெற்றி பெற்றுத் தனித்தனி மரபாகப் பிரிந்து கொண்டனர் என்பதனைத் தொன்னூல் வழியாக அறியலாம். சேரர்கள் குட்டுவன் மரபென்றும் பொறையன் மரபென்றும் பிரிந்தனர். பாண்டியர் கொற்கைப் பாண்டியர், கூடற்பாண்டியர் என்று பிரிந்தனர். சோழர்கள் உறையூர் சோழர் என்றும் புகார்ச் சோழர் என்றும் பிரிந்தனர். எனவே,

ஒரு பிரிவுக்குள்ளே பகைமை வளர்த்துக் கொண்டு போர் செய்து மடிந்தனர். எடுத்துக் காட்டாகச் சோழர் குடியைச் சேர்ந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் தம்முட் பல்முறை பகைமை கொண்டு போர் செய்ததைக் கூறலாம். வேந்தர் என்றாலே, போர் செய்வோர் என்றே எண்ணும்படி அவர்தம் வாழ்க்கை அமைந்திருந்தது.

கடை ஏழு வள்ளர்களில் காரி என்ற குறுநில மன்னன், பெருஞ்சேரலிரும்பொறைக்கு உதவியாகச் சென்று ஓரியை போரிட்டுக் கொன்ற செய்தியை அகம்:209–வது பாடல் மூலம் அறியலாம்.

**"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி**
**செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்**
**ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த"**

"செவ்வேர்ப் பலவின் பயன்கெழு கொல்லி ......." என்ற பாடல் வரிகள் ஓரியின் அழிவைக் குறிக்கின்றன. ஓரியைக் கொன்ற காரியைக் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனோடு சேர்ந்து அதியமான் வென்றான். இவ்வதியமானைப் பெருஞ்சேரல் இரும்பொறை கொன்றான். எனவே ஓரி காரியாலும், காரி அதியமானாலும், அதியமான் பெருஞ்சேரலிரும்பொறையாலும் கொல்லப்பட்ட செய்தியை அறியமுடிகிறது. அவ்வாறே பாரி என்ற குறுநில மன்னனை சேர, சோழ, பாண்டியர் மூவரும் ஒன்றிணைந்து போர் தொடுத்துக் கொன்றனர் என்பதனை இலக்கியவழி அறியலாம்.

சேரமான் இரும்பொறை, சோழ மன்னன் செங்கண்ணன் என்பவனுடன் பெரும்போர் மேற்கொண்டான். போரில் சேரன் தோற்றான். சோழன் வெற்றிபெற்றான். வெற்றி பெற்ற சோழன் சேரனைச் சிறைக்கோட்டத்தில் அடைத்தான். சிறையிடைத் தேம்பிய சேரன், ஒருநாள் தாகமுற்று வருந்தினான். தண்ணீர் தரும்படி சிறைக்காப்பாளனை வேண்டினான். அவன், காலம் தாழ்த்தித் தண்ணீர் தந்ததால், ''மானம் அழிந்த பின் வாழாமை முன் இனிது'' என்றெண்ணி உயிர் துறந்த செய்தி புறநானூற்றில் அறியலாம்.

சங்ககாலச் சோழ அரசர்களில் சிறப்பிடத்தைப் பெறுபவன் கரிகாலன்—காலம் கி.பி. 50 முதல் 95வரை. இவனைச் சேரரும் பாண்டியரும் ஒன்றிணைந்தோடு, 11 குறுநில மன்னர்களும் ஒன்றிணைந்து போர் தொடுத்தனர். இப்போரில் அனைத்து அரசர்களையும் புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றிவாகை சூடினான் கரிகாலன். இப்போர்க்களத்தில் சேரலாதன் முதுகில் காயம்பட்டதால் வெட்கித் தற்கொலை செய்து கொண்டான். இச்செய்தியைப் புறநானூற்றில் பரணர் பாடிய 65—வது பாடல் மூலம் அறியலாம். அவ்வாறே வெண்ணிப்பறந்தலை என்ற இடத்தில் கரிகாலனும், பெருஞ்சேரலாதனும் போரிட்டனர் என்பதனை அறியலாம். மேலும் வாகைப்பறந்தலை என்ற இடத்தில் ஒன்பது குறுநில மன்னர்களோடு கரிகாலன் போரிட்டு வெற்றிபெற்றான் என்ற செய்தியினை

அகநானூறு 125-வது பாடல் விளக்கி நிற்கிறது. இவ்வாறாகத் தமிழ்நாட்டையாண்ட மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் மொழி உணர்வையோ, இன உணர்வையோ காட்டிக் கொள்ளாது ஒருவரை ஒருவர் போரிட்டு அழித்துக் கொண்டனர் என்பதற்கு இது போன்று பல இலக்கியச் சான்றுகளும், வரலாற்று ஆதாரங்களும் இருப்பதைக் காணலாம். இவ்வாறு தமிழ் மன்னர்களுக்குள்ளும் பகைமை கொண்டு ஒற்றுமையின்மைக்குக் காரணமாகக் கீழ்க்கண்ட ஆறு கருத்துக்கள் அமைந்திருக்கலாம்.

**போர்பற்றிப் புகழ்தல்**

பண்டைக் காலத்தில் போர்த்துறையானது வாழ்க்கைத் துறைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டிருக்கிறது. தொல்காப்பியர், புறத்திணையியலில் கூறியுள்ள சூத்திரங்களில் 20 சூத்திரங்கள் போர் முறையைப் பற்றியே விவரித்துக் கூறுகிறார். மேலும் விளம்பிநாகனார் என்னும் புலவர் தன்பாடலில் (புறம் – 42) போர் நிகழாவிடின் போர் வீரர்க்கு நன்மை உண்டாகாது. போர் வீரர் இலரெனின் அரசனுக்கு நன்மை உண்டாகாது என்று கூறுகிறார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் (புறம் –24) புகழ்கின்ற போது, அரசனைப் போர்வீரர் வாழ்த்த வேண்டும் இரவலர் புகழ வேண்டும், அவனுக்கு மகளிர் மது தரவேண்டும், அவ்வாறு முடியுமாயின் அவனே வாழ்ந்தவனாவன் என்கிறார்.

பண்டைக்காலத்தில் எப்புலவர் எவ்வரசனிடம் சென்றாலும் அவனை 'அடுபோர் அண்ணல்' 'பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே', "அடுப்போர்ச்செழிய" என்று அவனுடைய போர்த் திறமையைப் புகழ்ந்தே பேசியிருக்கின்றனர். மேலும் போர்க்களத்தில் இறப்பவன் ஆன்மா சொர்க்கம் செல்லும்; அவன் உடல் களத்தில் விழும்; அவனுடைய புகழ் கற்சிலையில் நிற்கும் என்றும் புகழ்ந்திருக்கின்றனர். மூப்பிலும், பிணியிலும் இறக்காமல் போர்க்களத்தில் வீழ்ந்தாரே துறக்கம் பெறுவர் என்ற நம்பிக்கை (அகம்.61) அக்காலத்தில் வழக்கில் இருந்திருக்கிறது.

போர்க்களத்தில் இறக்காமல் நோயினாலோ அல்லது மூப்பினாலோ இறந்த ஒருவனை மண்ணில் புதைக்கும் பொழுது அவனது உடலை வாளாற் பிளந்த பின்னரே அடக்கம் செய்வர் (புறம் – 93) என்ற செய்தியினையும் இலக்கியம் வழி அறிகிறோம். எனவே பண்டைய நாளில் தமிழ் நாட்டிலிருந்த அரசர்களும், அறிஞர்களும் போர்த்தொழிலையே புகழுடைய தொழிலாகப் போற்றினர் என்பதனை அறியலாம்.

**தோள்தினவு காரணமாகப் போர் தொடுத்தல்**

ஓர் அரசன் தன் வலிமையை உலகம் புகழ்தல் வேண்டும் எனக்கருதி மாற்றரசர்கள் மீது போர் தொடுத்த செய்தியினை இலக்கியங்கள் வழி அறியலாம் தமிழரசர்கள் எவ்விதக் காரணமுமின்றி வெறும் தோள்தினவு காரணமாகவே போர் செய்தனர் என்பதனை அறியலாம். தமிழ் மன்னர்களும் சேரன் செங்குட்டுவன், கடலிடையே வாழ்ந்தவர்களைத் தாக்கி வென்றான். அவன் அவ்வாறு அவர்களைத் தாக்கியதற்குக்க காரணம் தன்தோள் பூரிக்கப்போர் புரியும் வேட்கை காரணமாகவே கடலை வளைத்துப் போரிட்டான் என்று அகம் 221–வது பாடல் கூறுகிறது. தமிழ் மன்னர்கள் தோள்தினவோடு தாங்கள் கூறிய வஞ்சினத்தை (சூள்வரை) நிலைநாட்டுவதற்காகவும் கடுமையாகப் போரிட்டனர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பின்வருமாறு வஞ்சினம் கூறினான் 'பகைவரை யான் வெல்லேன் ஆயின், எம் குடிமக்கள், எம் அரசன் கொடியவன் என்று கண்ணீர் சிந்திப் பழிதூற்றும் கொடுங்கோலன் ஆகக்கடவேன். புலவர்கள் எனது நாட்டின் சிறப்பினைப்பாடாது ஒழிவாராக. இரப்பவர்க்கு கொடுக்க இயலாத வறுமையையான் அடைவேன் ஆகுக' எனக்கூறிப் போரிட்டிருக்கிறான் என்பதைப் புறநானூற்றின் மூலம் அறிய முடிகிறது.

**மண்ணாசை**

போர் தொடுப்பதற்கு மற்றொரு காரணம், ஓர் அரசன் மற்றோர் அரசனுடைய நாட்டைக் கவர வேண்டும் என்ற ஆசையால்

போர் தொடுத்தனர். செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சேரன் அரசுகட்டில் ஏறிய போது, அவனுடைய நாடு அளவில் சுருங்கியதாக இருந்தது. அவ்வாறு சுருங்கிய நாட்டில் ஆள அவன் விரும்பவில்லை. எல்லா நாடுகளும் தன்னுடைய ஆட்சியில் நிற்கவேண்டும் என்று விரும்பினான் என்ற செய்தியினைக் கபிலர் (புறம்–8) ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

> "வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
> போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
> ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
> கடந்தடு தானைச் சேரலாதன்...."

என்ற பாடல் வழி அறியலாம். அதியமான் நெடுமான் அஞ்சியைப் பார்த்து ஔவையார் புறம் 99–வது பாடலில் 'ஒரு நாளும் நீங்காத அரசுரிமையைப் பெற்றும் திருப்தி அடையாய்' என்று கூறுவதும் இக்கருத்தின் அடிப்படையிலேயாகும். மேலும் சோழன் கரிகாற் பெருவளத்தானை, பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

> "உருகெழு தாயம் ஊழின் எய்திப்
> பெற்றவை மகிழ்தல் செய்யான்"

என்று கூறுகிறார். அதாவது தனக்கு அரசுரிமையால் கிடைத்த நாட்டின் ஆட்சியில் திருப்தி அடையாமல் வேறு நாடுகளைப் பிடிக்கவேண்டும் என்ற ஆசையால் போர் செய்தான் என்ற செய்தியைப் புலவர் கூறிச் செல்கிறார். எனவே, தமிழ் மன்னர்கள் பிறநாடுகளை வென்று தம்முடைய குடையின் கீழ்க் கொண்டு வரப் போர் செய்தனர் என்பதனை அறியலாம்.

**பொருளாசை**

பண்டைக் காலத்தில் அரசன் குடிகளிடமிருந்து வரி வசூலிப்பான். அது அவனுக்குப் போதாதநிலை வரும்போது, பிறநாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கவர்வதும், கொள்ளையிடுதலும் அங்குள்ள அரசர்களிடம் திறையைப்

பெறுவதும் வாயிலாக ஈடுசெய்திருக்கிறான். இவ்வாறு போர்மூலம் மூவேந்தர்களும் பொருள் திரட்டினர் என்பதனை அகம்–31 வது பாடல் மூலம் அறியலாம்.

"வென்றியோடு வில்லலைத் துண்ணும்
வல்லாண் வாழ்க்கை தமிழ்கெழு மூவர்"

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம். நல்லியக் கோடன் என்னும் தமிழ் மன்னன் முடி மன்னர்களின் அரண்களை அழித்துப் பெரும் பொருளைக் கவர்ந்து, அப்பொருள்களைப் பாணர்களுக்கு வழங்கினான். அவ்வாறே அவனது படைத்தலைவர் குறுநில மன்னர்களையும், முடியுடைய வேந்தர்களையும் அழித்துப் பொருள் கொண்டு வந்து கொடுப்பர் என்ற செய்தியை சிறுபாணாற்றுப்படையின் (வரி, 247–249) மூலம் அறியலாம். பண்டைக்காலத்துப் புலவர்கள் அரசர்கள் போரின் மூலமாகப் பொருள் தேடுவதை அறத்திற்குப் புறம்பான செயலாகக் கொள்ளவில்லை. அதனாலேயே குறுங்கோழியூர்கிழார் என்னும் புலவர் சேரமான் யானைக்கட்சேய்மாந்தர் சேரலிரும்பொறையை

"திறனறி வயவரொடு தெவ்வர்தேய, அட்டு
பிறர் மண்ணுண்ணும் செம்மல்" (புறம்–20)

என்று போற்றுகிறார். எனவே அரசர்களைப் புகழ்கின்ற புலவர், கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றவர்களுக்குப் பொருள் வழங்குவதற்கும், அரசர்கள் சிறப்பான வாழ்க்கை நடத்துவதற்கும் தன் இனத்து மன்னர்களிடமே போரிட்டுப் பொருள் கவர்ந்திருக்கின்றனர்.

**திறை செலுத்த மறுத்தவர்கள் மீது போர் தொடுத்தல்**

ஓர் அரசன் மற்றோர் அரசனைப் பார்த்து, 'என்னை உன் தலைவனாக ஏற்றுக்கொள், என் ஆணை வழி ஒழுகு' என்று கூறும்போது அவ்வரசன் மறுத்தால் அவன் மீது போர் தொடுத்திருக்கும் செய்தியினை எட்டுத்தொகை நூல்கள் வழி அறியலாம். பிற்காலத்தில் எழுந்த கலிங்கத்துப் பரணியை இதற்குச்

சான்றாகக் காட்டலாம். சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் கலிங்க மன்னன் அனந்தவர்மனைத் தனக்குக் கீழ்ப்படிந்து திறை செலுத்துமாறு பணிக்கிறான். அனந்தவர்மன் மறுத்துவிடவே குலோத்துங்கன் போர் தொடுக்கிறான். இப்போரினால் அனந்தவர்மன் சிறை பிடிக்கப்படுகிறான். மேலும் கலிங்கத்துப்–பரணியில் சோழனிடம் போரில் தோற்ற சேர, பாண்டிய மன்னர்களின் மனைவியர் குலோத்துங்கனின் மனைவியர்க்குப் பணிப்பெண்களாகத் தொண்டு செய்த காட்சி பல்வேறு இடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறே சேர, பாண்டிய மணிமுடிகள் சோழன் திருவடிகளில் கிடக்கும் காட்சியை செயங்கொண்டார் வர்ணித்துச் செல்கிறார். இவ்வாறு தமிழ் மன்னர்களில் ஒருவர் தலைமையை மற்றொருவர் ஏற்க மறுத்தால் போர் தொடுக்கும் செயலை நிறைய இலக்கியச் சான்றுகள் உணர்த்திக் காட்டுகின்றன.

**போரால் ஏற்பட்ட அழிவுகள்**

தமிழ் மன்னர்கள் ஒருவருக்கொருவர் போர் தொடுக்கின்றபோது அவர்கள் மக்களுக்குச் செய்கின்ற அழிவை எண்ணும்போது நெஞ்சு நெகிழ்கிறது. இதையே தொல்காப்பியர் 'எரி பரந்தெடுத்தல்' என்ற ஒரு துறையாகக் காட்டிச் செல்கிறார். ஒரு அரசன் மற்றொரு அரசன் மீது போர் தொடுக்க எண்ணும் போது அப்போருக்கு கால்கோள் விழாவாக எரியூட்டுதலை நிகழ்த்துவான். இதனால் மக்கள் குடியிருக்க வீடின்றி அவதிப்படுவர். மேலும் அவர்களுக்குக் குடிக்க நீர் கிடையாதபடியும் அவ்வரசர்கள் செய்வர். அதியமான் மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடும்பொழுது அவன் செய்த செயல்களைப் புகழ்கிறார். போர் தொடுக்கும் அரசன் ஊர்களை எரித்தான். நீர்நிலைகளை அழித்தான். வயல்களைப் பாழாக்கினான். தலைநகரத்து அரண்களைத் தரைமட்டமாக்கினான் என்று புறம் 392–வது பாடலில் குறிப்பிடுகிறார்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் செய்த செயல்களை மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் (பாடல் வரி 147–176) விரித்துக் கூறுகிறார்.

நெடுஞ்செழியனே! நீ ஊரிலே தங்கியிருக்க மனம் கொள்ளாமல் பகைவர் மீது படையெடுத்து அவர்களின் அரண்களை அழித்தாய். அவர்களுடைய பொழில்களைக் கெடுத்தாய். அங்குள்ள மருதநிலத்து வயல்களில் தீ வைத்தாய், அதனால் அவர்களின் நாடு என்ற பெயர் போய்க் காடு என்று பெயர் பெற்றது, என்று பாண்டியன் செய்த செயல்களைக்குறிப்பிடுகிறார். இச்செயல்கள் மூலம் அந்நாட்டில் வாழ்ந்த மக்கள் எத்துணை துன்பத்தினை அடைந்திருப்பர் என்று அரசன் அறிந்து கொள்ளவில்லை, இச்செயலை அக்காலத்து அரசர்களும் சரி, புலவர்களும் சரி, போர் அறச்செயல் என்ற கருத்தினர். பல மன்னர்கள் எரியூட்டிய நிகழ்ச்சியினைப் பல்வேறு இலக்கியங்கள் வழி அறியலாம்.

இவ்வாறாகத் தமிழ்மொழி பேசுகின்ற தமிழ் இனத்தைச் சேர்ந்த மூவேந்தர்ளும், குறுநில மன்னர்களும் ஒருவரை ஒருவர் போரிட்டுக் கொன்று குவித்தனர். இவர்களின் செயலால் ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆட்பட்டனர். தமிழ் மன்னர்களின் ஒற்றுமையின்மையால் வேற்று இனத்து அரசர்கள் உட்புகுந்து ஆட்சியைப் பிடித்தனர். அவர்களின் ஆட்சியால் தமிழர்களின் பண்பாடுகளும் மரபுகளும் அழிக்கப்பட்டன. அதே நிலை இன்றும் தமிழ் மக்களிடம் உள்ளதுதான் வியப்பாக உள்ளது. 'தமிழா! இன உணர்வு கொள்' என்று இன்றைய தமிழ்ச் சமுதாயத்தைப் பார்த்துக் கூறி இன உணர்வை ஏற்படுத்த எண்ணுவதை எண்ணி மிக வேதனைப் படவே முடிகிறது. சங்ககாலத்தைச் சேர்ந்த மூவேந்தர்களும் சரி, குறுநில மன்னர்களும் சரி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு வாழ்ந்தனரே தவிர மக்கள் நலன் கருதி ஆட்சி செய்யவில்லை. இவர்களின் ஒற்றுமையின்மையின் காரணமாகவே களப்பிரர் என்ற வேறு ஒரு இனம் தமிழகத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தது. இவ்வினத்தவரை முறியடித்துப் பின்னர் பல்லவர் தமிழகத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

சங்ககால மூவேந்தர்கள் எவ்வாறு ஆட்சி செய்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் அதிகம் கிடைக்கப்பெறவில்லை. இலக்கியச் சான்றுகளே அதிகம். சங்ககாலச் சோழ மன்னர்களில் கரிகால் சோழன் காவிரிநதியில் கல்லணையைக் கட்டி, நீரைத்தேக்கி, அந்நீரைப் பாசனங்களுக்குப் பயன்படுத்தச் செய்திருக்கின்றான். சங்ககால அரசர்கள் கிராமங்களை எவ்வாறு அமைத்தார்கள். சாலை அமைப்புகள் எவ்வாறு அமைந்திருந்தன. கட்டிட அமைப்புகள் எந்நிலையில் அமைந்திருந்தன என்பதற்கு மூலச்சான்றுகள் (செப்புப் பட்டயமாகவோ, கல்வெட்டாகவோ, புதைகுழி ஆராய்ச்சியோ) எதுவும் கிடைக்கவில்லை.

பல்லவர்கள் காலத்திற்குப் பின்னர் ஆட்சிசெய்த சேர, சோழ, பாண்டியர்கள் சிறப்பான ஆட்சி செய்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் அதிகம் உள்ளன. பிற்காலத்தமிழ் மன்னர்கள் காலத்தில் ஆரியர்கள் தமிழகத்தில் புகுந்துவிட்டனர். ஆரியர்களின் அறிவுரையை தமிழ் மன்னர்கள் அதிகம் கேட்டதால், தங்களுக்குக் கோட்டைகள் கட்டுவதைவிட கோவில்களையே அதிகம் கட்டினர். சோழர்கள், தஞ்சைப் பெரியகோவில், கங்கைகொண்ட சோழபுரம் கோவில், தாராசுரம் கோயில், திரிபுவனம் கோயில் மற்றும் பாண்டியர்கள் மதுரை மீனாட்சியம்மன் கோவில் போன்று தமிழகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கோவில்களை கட்டினர்.

சங்ககாலத்தில் சமயத்தின் பெயரால் அதிகச் சண்டைகள் ஏற்படவில்லை. களப்பிரர் காலத்திற்குப்பின்னரே சமயச் சண்டைகள் உருவாயின. திருநாவுக்கரசர் சமணத்திலிருந்து விலகி சைவசமயத்தில் சேர்ந்ததற்காகச் சமண சமயத்தவரால் எவ்வளவு துன்பத்திற்கு ஆளானார் என்பதனை அறியலாம். பக்தி இலக்கிய காலகட்டத்தில் சமயச் சண்டை உச்சகட்டத்தை அடைந்தது. கி.பி. 640-லிருந்து 670 வரை பாண்டியர் ஆட்சி செய்த காலத்தில் திருஞானசம்பந்தர் 8000 சமணர்களை வாதத்தில் வென்றார் என்பதற்காக, அவர்கள் அனைவரையும் கழுவில் ஏற்றினர்.

தொடக்கத்தில் சமணம், பௌத்தமதங்களோடு சண்டையிட்டுக் கொண்ட தமிழர்கள் பின்னர் தங்களுக்குள்ளே சைவம், வைணவம் என்ற இருபகுப்பாகப் பகுத்துக் கொண்டு எம்மதம் சிறந்தது என்பதனை நிலைநாட்டுவதற்காகச் சண்டையிட்டுக் கொண்டனர். சங்ககால மூவேந்தரானாலும் சரி, பிற்கால மூவேந்தரானாலும் சரி, தமிழ் பேசுகின்ற தமிழ் இனத்தவர்களை மொழியாலும் இனத்தாலும் ஒன்றுபடுத்த முயற்சி செய்யவில்லை, ஒரு வேளை அவர்கள் முயற்சி செய்திருப்பார்களேயானால் அவர்களின் வாழ்க்கை பறிக்கப்பட்டிருக்கும்.

தமிழ் மக்கள் முடியாட்சிக் காலத்தில் எவ்வாறு ஒற்றுமையில்லாமல் இருந்தார்களோ அதே நிலையில் இன்று மக்களாட்சி முறையிலும் ஒற்றுமையில்லாமல் இருக்கின்றனர். இன்று தமிழ் மக்கள் சாதியின் பெயரால் கட்சியினைத் தொடங்கி மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கின்றனர். மேலும் தமிழ்நாட்டில் எண்ணிக்கையில் அடங்காத அளவிற்கு கட்சிகளை அமைத்துக் கொண்டு அக்கட்சியின் மூலமாக தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கின்றனர். இங்குள்ள கட்சிகள் ஏதாவது ஒன்று ஆட்சிக்கு வரும்போது, அக்கட்சியில் அமைச்சர்களாக இருப்பவர்கள் மக்களைப்பற்றி கவலை கொள்ளாது தங்களது வாழ்க்கையை எவ்வாறு வளப்படுத்திக் கொள்வது என்ற சிந்தனையிலேயே ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றனர். முடியாட்சியில் அரசர்கள் வாழ்ந்ததை விட இன்று அமைச்சர்கள் இன்பமாக வாழ்க்கை நடத்துகின்றனர். ஆட்சியாளர்களின் வாழ்க்கை உயர்வுக்காகவே இன்றைய தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். தமிழனிடம் மொழி உணர்வு, இனஉணர்வு, பகுத்தறிவு போன்றவை உள்ளத்தில் தோன்றாத வரை தமிழன் ஒற்றுமையாக வாழப்போவதுமில்லை; அவன் வாழ்வு உயரப்போவதுமில்லை.

# மகளிரின் மறமேம்பாடு

*ர.தமிழரசி*

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழியல் துறை)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலை நகர்

மனித இனம் தோன்றிய நாள்முதல் இயற்கையோடும், பிற உயிர்களோடும் போராடிக் கொண்டே வாழ வேண்டியுள்ளது. இதன் விளைவாக அக்கால மக்களின் வீரமேலீட்டை நாம் கண்டு வருகிறோம். ஆடவர் மட்டுமல்லாது மகளிரும் மறமேம்பாடு மிக்கவராய் திகழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை புறநூல்கள் நன்கு விளக்கி இருக்கிறது.

**மறவுணர்வின் தோற்றம்**

புறப்பொருளில் முதன்மை பெறும் மறவுணர்வு மனிதன் தோன்றிய நாளிலிருந்து உடனிருந்து வரும் உணர்வாகும். போரின் தொடக்கம் குறித்து புறநானூறு,

> "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
> புதுவதன்று இவ்வுலகத்தியற்கை[1] (புறம்-76.2)

எனக் குறிப்பிடுகிறது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டினரான கிரேக்க தத்துவ அறிஞர்

> "போர்தான் யாவற்றிற்கும் தந்தை எல்லோருக்கும்
> அரசன் ............ போராட்டத்தின் மூலம்தான்
> எல்லாப் பொருள்களும் உயிர்த்தன்மை அடைகின்றன.[2]"

என்று கூறுவதை சமூக நூலார் எடுத்துக் காட்டுவர்.

தொடக்க கால மனிதன் உணவு தேடுவதிலும் தன்னைக் காத்துக் கொள்வதிலும் இப்போர்ப் பண்பைத் துணையாகக் கொண்டிருக்கிறான்.

---

1. Pearce F.G. Oxford University Press, London 1965 - P.13
2. பாஸ்கல் கில்பார்ட் சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் ஜெ.நாராயணன் தமிழ் வெளியீடு கழகம், சென்னை—1964—ப.63

பின் கூட்டமாக வாழக் கற்றுக் கொண்ட நிலையில் தமக்கு வேண்டிய பொருள்கள் தம்மிடம் இல்லா நிலையில் அப்பொருளுடைய குழுவைக் கருவி கொண்டு தாக்க முனைந்தமையே போரின் தொடக்கமாயிற்று.[3]

**வீரமும் புகழும்**

இமயம் வரை படையெடுத்துச் சென்ற தமிழ் மன்னர்கள் இமயமலையில் கயல், புலி, வில் பொறி பதித்து மீள்கின்றனரேயன்றித் தாம் வென்ற பகுதிகளைத் தம் பொறுப்பில் வைத்துக் கொள்பவராக இல்லை. பெரிய நிலப்பரப்பை ஆளவேண்டும் என்ற அவா இருந்தும் தாம் கொண்ட நாடுகளில் ஆட்சி செய்யாமைக்குரிய காரணம், வீரத்தால் பெற்ற நாடுகளை ஈகை உணர்வால் பிறர்க்கீந்து புகழ் ஈட்டும் விருப்பம் தமிழ் வேந்தர்க்கிருந்தமை அறியப்பெறும்.

**அஞ்சா நெஞ்சத்தின் அமர்முறை**

"பெருமையும் உரனும் ஆடூஉமேன" என்ற ஆடவர் தம் பொதுவான பண்பு அமர்க்களத்தில் மேம்படுவதைக் காண்கிறோம்.

'எறி படைக்கு ஓடா ஆண்மை'[4]

தமிழர் தறுகண்மைக்குச் சான்றாகக் கருதப்பட்டது.

பண்டைத் தமிழர் வீரத்தோடன்றி மானத்தோடும் விளங்கினர். "மானம் என்பது தன் நிலைமையில் தாழாமையும் தெய்வத்தான் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்" என்பார் பரிமேலழகர்.

தன் உயிர் போனாலும் ஒருவன் தன் குடிப்பிறப்பிற்குப் பொருந்தாத மாணங்கெட வரும் செயல்களைச் செய்தல் முறையன்று என்பதனைத் திருவள்ளுவர்

**"இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்**
**குன்ற வருப விடல்"**[5] என்பார்.

---

3. தொல் களவு - நூ.7
4. புறம் 15 - (11)
5. குறள் - 961

"மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே"

என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தனர் தமிழர்.

**வீரத்தாயர்**

மறக்குடியில் தோன்றிய வீரமுள்ள மகள் ஒருத்தி இருந்தாள். முன்னாளில் நடந்த போரொன்றில் அவளது தந்தை யானையொன்றினைக் கொன்று தானும் போர்க்களத்திலே உயிரிழந்தனன். முந்தின நாளிலே அவள் கணவன் ஆநிரையை மறித்து நின்று தன் ஆவி போக்கினான்.

இவ்வாறாகியும் அவள் அன்று போர்ப்பறையின் ஒலியைக் கேட்டதும் வீரம் தூண்டத் தன் ஒரே பாலகனை அழைத்தாள். சிதர்ந்திருந்த அவன் தலைமயிரில் எண்ணெய் தடவி வாரி முடித்து, வெண்மையான ஆடையொன்றை உடுத்தி, வேற்படையை அவன் கையில் எடுத்துக் கொடுத்துப் போர்க்களம் செல்லும்படி அனுப்பினாள். இவ்வீரத்தாயின் பெருமித இயல்பு எத்தகையது என இதன் மூலம் அறியமுடிகிறது. இதனை

**"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே**
**மூதின் மகளிர் ஆதல் தகுமே**
**மேனாள் உற்ற செருவிற் (கு) இவன் தன்னை**
**யானை எறிந்து கள்ளத் தொழிந் தனனே**
**...... ........ ......................**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுக நோக்கிச் செல்கென விடுமே**[6]

எனப் புறநானூறு விளக்குகிறது.

மேலும், ஒரு தாய் தன் மகன் போரின் போது புறங்கொடுத்து

---

6. புறம் - 279

மீண்டான் (மாண்டான்) என்று கேள்வியுற்றதும் அவள் உரைத்த சூளுரையை,

"நரம்பெழுந் துலறிய நிரம்பாமென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலைஅறு, திருவென் யான் எனச் சினைஇக்
கொண்ட வாளொடு பிடுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே"[7]

புறப்பாடல் எடுத்தியம்புகிறது.

ஒரு தாயை நோக்கி உன் மகன் எங்கேயுள்ளான் என்று ஒருவன் வினவினான். அதற்கு அவள் என் மகன் எங்குள்ளான் என்பதை நான் அறியேன். புலி மலைக் குகையிலே தங்கிவிட்டு வெளியேறும்போது, அது எங்கே சென்றது என்பதைக் குகை எவ்வாறு அறியாதோ, அது போலவே என் மகன் சென்ற இடம் இன்னதென்பதை நானுமறியேன்.

ஈன்ற வயிறு இது. இவ்வளவே எனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு. புலி இரை வேட்டைக்குச் செல்லுதலே இயல்பு. இதுபோலவே என் வயிற்றில் தங்கிய புதல்வன் போர் வேட்டைக்குச் செல்லும் இயல்பினன். ஆதலின் போர்க்களம் செல்லின் நீ அவனைக் காணலாம் என்பதனை,

"சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டுள னோவென வினவுதி என் மகன்
யாண்டுளனாயினும் அறியேன்; ஓரும்"

---

7. புறம் – 278

"புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே"[8]
என புறநானூற்றுப் பாடல் உயர்த்துகிறது.

**கடமை**

மறக்குடியிற் பிறந்த மற்றொரு தாயின் கூற்றாக அமைத்து பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர் ஒரு நாட்டிலுள்ள அரசன் முதலான பலருடைய கடமைகளை உயர்த்துகின்றார்.

அவற்றுள் ஒரு தாயின் கடமையே தலைக்கடன் என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு தாய் வயிற்றினின்றும் பிறந்த காளையின் கடமை "ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல்" என்று கூறுவதால் இளைஞர் தம் நாட்டின் பொருட்டு ஆற்றுதற்குரிய அருங்கடன் இன்ன தென்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இவற்றை,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே!
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே!
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளையர்க்குக் கடனே!"
தெளிவாக்குகிறது புறநானூறு.

மறக்குடி மகளிர் தன் குலத்தார் வீரச்சிறப்புக்களை எடுத்துரைத்துப் பெருமை பாராட்டுவதும் வழக்கம். முன்னோர் வீரச்செயலைக் கூறிப் பின்னோர்க்கும் வீர உணர்ச்சியை ஊட்டுதல் பண்டை மரபு. இக்குணத்தைப் புறப்பொருள் வெண்பாமாலையார்

"கண்ணின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்ய விந்தா ரென்னையர் பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் பின்னோடி
எய்போற் கிடந்தானென்னேறு"
என்னும் வெண்பாவில் அமைத்துப் பாடுதல் அறிந்து மகிழத்தக்கது.

---

8. புறம் – 86

**விழுப்புண்**

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து (குறள்–775)"

என்ற கொள்கையை உடைய பழந்தமிழர்கள் போர்க்களத்தில் இறந்தாலே துறக்கத்திற்குச் செல்ல முடியும் என்ற அசைக்க முடியாத எண்ணங் கொண்டிருந்தனர். விழுப்புண் உடைய போர் வீரர் மிகச் சிறந்த வீரர் என்ற எண்ணம் பழந்தமிழர் வீர நிலைக்களத்து நின்று நிலவியது.

போரின்போது மார்பிலே ஏற்பட்ட புண்ணை மீன் கொத்திப் பறவை நீரிலே மூழ்கும்போதும் எழும்போதும் அதன் அலகு எங்ஙனம் முன்னால் செல்லுமோ அது போல வளைந்த ஊசியை வெட்டுண்ட தசையை இணைக்கு செலுத்தி, வடு நீங்காத விழுப்புண் உடையவரிடமே போரிடும் மாட்சிமை பெற்றவன் செங்குட்டுவன் எனப் பரணர் பாட்டால் அறிகிறோம்!

**நடுகல்**

போர்க்களத்தில் சிறந்த முறையில் போர் செய்து உயிர்நீத்த வீரனுக்குச் சின்னமாக எடுக்கப்பட்டது – நடுகல். மறக்குடியினர் நடுகல்லைத் தம் குல தெய்வமாகவே வழிபட்டனர். அவ்வீரக்கல்லே வழிபாட்டிற்குரிய கடவுளில் சிறந்தது என்ற நிலையை,

"ஒன்னாத்தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவினல்லது.
நெல்லு குத்துப் பரவுங் கடவுளுமிலவே" (புறம் – 335 (9–12)

என்ற புறநானூற்றுப் பாடல் தெளிவுபடுத்துகிறது.

**முடிவு**

இதுகாறும் கூறியவற்றால் தமிழகத்தில் முன்னாளில் வாழ்ந்த வீரத்தாயர் வீரவுணர்ச்சியை ஊட்டி வீரப்புதல்வர்களை விழுமிய நிலையில் அருஞ்செயல் மறவ தாய் வளர்த்தனர். அவர்களின் வீரத்தைப் போற்றும் வண்ணம் நடுகல் எடுத்து வழிபடுத்தி வந்துள்ளனர். நேரிய முறையில் நாடுகாத்தல் பொருட்டுத் தன் ஆவியை அர்ப்பணம் செய்தவர் அவ்வீரப் புதல்வர் என்பது நன்கு அறியப்படுவதோடு அக்கால மகளிரின் வீர மேம்பாடு இத்தகையது என அறியமுடிகிறது.

# திருக்குறளில் கருத்தியல் போர்

பேராசிரியர் கருவை பழனிசாமி
சென்னை – 94

செய்நன்றியறிதலை வரையறுப்பதோடு அதன் மதிப்பை நிறுவிக்காட்டுவதற்கு எண்ணி எழுதிக்காட்டும் முயற்சியே ஒருபோர் நடவடிக்கை போல் தோன்றுகிறது.

1. வையகமும் வானகமும் ஈடாகமாட்டா
2. மண்ணுலகம் விண்ணுலகம் கைமாறாகக் கொடுத்தாலும் ஒப்பாகா
3. கடலைவிடப்பெரிது
4. பனையின் அளவாகக் கருதுவர்
5. உலகத்தைவிடப்பெரிதாக மதிக்கப்படும்
6. பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

அதனால்,

மறக்கக்கூடாததும் நன்றியறிதல்; எப்போதும் நினைக்கக்கூடியதும் செய்ந்நன்றியறிதல்; எத்தகைய அருவப் பொருண்மையையும், வடிவமைப்பதில் குறளில் நிகழும் கருத்துப் போர்தான் அதிகாரவைப்பு முறை.

உயிரைப் பறிக்கும் சாவு எதிர்கொண்டு வந்தாலும் அஞ்சாமல் ஒன்றுபட்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதற்கே படை என்ற பெயர்பொருந்தும் என்பது 'கூற்றுடன்று மேல்வரினும் கூடிஎதிர்நிற்கும் ஆற்றலதுவே படை' என்ற குறளுக்குக் கலைஞர் வரைந்த உரை; இதுவும் ஒருவகையான கருத்துப்போரின் சாயலே; வெற்றி வேண்டும், தோல்வி வேண்டாம் என்பதுதான் கருத்துப்போர். பகைவர்க்கு அஞ்சாதவீரம் பெரும் ஆண்மை என்று போற்றப்படும்; அந்தப்பகைவர்க்கு ஒரு துன்பம் வரும்போது அதைத்தீர்க்க உதவிடுவது ஆண்மையின் உச்சம் எனப்புகழப்படும் ஊராண்மையாகும்.– 773

இன்றுபோய்ப் போருக்கு நாளை வாவென்ற இராமாயணத்தைக் காட்டுவார் பரிமேலழகர்

முயலுக்குக்குறி வைப்பது வெற்றியா? யானைக்குக் குறிவைப்பது தோல்வியா? – 772

குன்றேறி– யானைப்போர் காண்பதுதான் அருகில்நின்றே கோழிச்சண்டை நாய்ச்சண்டை காண்பதைவிடமேல் – 758

கடல்போன்றதோர் எலிப்பகை நாகத்தின் சீற்றத்துக்கு பதில் கூறுமா?

என்தலைவனுக்குத் தோற்றுக் கல்லாய் சிலையாகி நின்றவர் பலர் தெரியுமா?

வீரத்தின் பெருமைபாடிடும் பல்வேறு கருத்துக்களை அடுக்கிஅடுக்கி வளர்த்துச் செல்லும் வடிவமைப்பே ஒரு வகைப்போர்தான்.

எதிர்ப்பது – விடுப்பது: போர்க்களத்தில் ஒப்பாரியா?

செஞ்சிலுவைச் சங்கம் என்பது தான் என்ன?

பேராண்மை – தறு கண். ஊராண்மை (773) உச்சம்

பேராண்மை – பெருங்குணம் – அறநெறி மட்டுமன்று ஊராண்மை – ஒழுக்கத்தின் சிகரம் கருத்துப்போரினை அறியமுடியுமா? உணர முடியுமா?

பயனில சொல்லாமையை நியாயப்படுத்துவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பொய்
குறளை
கடுஞ்சொல்

பயனில் சொல் – என்று நான்குவகைச் சொல் அவற்றுள் பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின் அஃதொழித்து இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனை மூன்றனுள் கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூறாமை யானும் விலக்கிய பிறகு நின்றது பயனில் சொல் இதனால் விலக்கப்படும்; இது ஒரு கருத்துப்போர்.

நடுவு நிலைமை எந்தக் காரணத்தாலும் சிதையலாகாது என்பதனால் செய்நன்றி அறிதலின் பின்வைக்கப்பட்டது.

நெறியில்நீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டும் என்பதற்கு பொறையுடைமை பிறனில்விழையாமையின் பின்வைக்கப்பட்டது; ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வதாதலின் பிறனில் விழையாமை ஒழுக்கமுடைமையின் பின்வைக்கப்பட்டது.

இதுஒரு கருத்துப்போர்; தீவினை என்பது மெய்யின்கண் நிகழும் பாவங்கள் எல்லாம் தொகுத்து விலக்குகின்றாராதலின் – பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது. இது ஒருகருத்துப்போர்.

**சமூகத்தீமைகள் பத்து**

1. கள்ளுண்ணல்
2. சூதாடுதல்
3. வரைவில் மகளிரோடு உறவு
4. பெண் வழிச் சேறல்
5. புல்லறிவாண்மை
6. பேதைமை
7. களவு
8. இரவு
9. நல்குரவு
10. கயமை

ஆகியவைகளை எதிர்த்துப் போராட முயன்றவர் திருவள்ளுவர். சமூக நோய்களைக் கண்டறிந்து அவைகளை சமூகத்தீமையென உற்றுநோக்கி, உணரமுயன்றதோடு அவைகளை முற்றாகக்களைந்து தீர்க்க விரும்பியதோடு அதற்கான வழிவகைகளையும் காட்டுவது ஒரு வகை கருத்தியல் போராகவே எண்ண இடமுள்ளது.

தீவினை அச்சத்தில் அரும்பிய சிந்தனைதான் வள்ளுவரின் கருத்தியல் போர்; வினைத்தூய்மையிலும் கருக்கொண்ட வேட்கைதான் சமூகத்தீமைகளை சமூகப்பகையை சமூக நோய்களை வேரறுக்கும் முடிவாக உருவாகியுள்ளது தெரிகிறது.

நாட்டுக்கு நாடாகப் பகை கொள்வதும் போரிடுவதும் திருக்குறளில் வெளிப்படையாகவே விவாதிக்கப்பட்டுள்ளது.

1. இகல்
2. பகை மாட்சி

3. பகைத்திறன் தெரிதல்
4. உட்பகை

என்று விரிவாகவே அலசிக்காட்டிய பகையை தேசப் பகை என்றே சுட்டலாம்; அதே கோட்பாடுகளை, சமூகத்தீமைகளை அறிந்து போரிடும் கோட்பாடுகளுக்கும் பொருத்தலாம். சமூகத்தீமைகளை கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்துவதே தேசப்பகை. அத்தகு பகையை ஒழிக்கப் போரிடுவது முதன்மையான தேசப்பற்று. அந்த சமூகபிரச்னை திருக்குறளில் நூல் முழுவதும் இழையோடியுள்ளதைக் கண்டுணர முடிகிறது. அந்த விழிப்புணர்ச்சிக்கு வித்திடுவதில் வஞ்சகமில்லாமல் துணிந்து முனைந்ததைத்தான் வள்ளுவரின் கருத்தியல் போர் என்று கருதவேண்டியுள்ளது. திருக்குறளில் இடம் பெற்றுள்ள கருத்தியல் போரினைக் கோட்பாடாகச் சுட்டுவதற்காக மருத்துவ அறிவியலில் உள்ள Pathology என்ற இயலோடு ஒத்துப் பார்ப்பது அவசியம். தும்பை விட்டு வாலைப்பிடிக்காமல் கொம்பையே மடக்கி முரட்டுக்காளையை அடக்க முனைவதுதான் அவருடைய கருத்தியல் போராகும். அதனை அவருடைய வாய்ப்பாட்டில் சூத்திரமாகச் சொல்லவேண்டுமானால் ‘இளைதாக முள்மரம் கொல்க’ என்ற முத்திரைவாசகமே குறளின் கருத்தியல் போருக்கான வேலாகத்தெரிகிறது. ஒப்புரவறிதல், ஈகை, கண்ணோட்டம் முதலிய அதிகாரங்கள் குறள் கருத்தியல் போரின் கேடயங்களாக தெரிகின்றன. வறுமையாம் நல்குரவினை ஒரு பெரும் பகையாகக் கருதிய வள்ளுவப் பெருந்தகைக்கு உழவுத்தொழிலுக்கான ஏர்முனையே அவர் கையாளும் போர்க்கருவி; ஒப்புரவறிதலும் உறுதுணையாகிறதாகக் கருதுவது வள்ளுவரின் கருத்தியல் போர் உத்தி. புல்லறிவாண்மை, பேதைமை, ஆகிய சமூகநோய்களை நீக்கக் கல்விகேள்விகளே வள்ளுவரின் கருத்தியல் போர்ப்படையின் அணிவகுப்பு, வரைவின் மகளிர், கள், சூது, ஆகிய பகைகளை மானம், சான்றாண்மை, பெருமை, நாண் ஆகிய குறிக்கோள்களே மாற்றுமருந்தாகி படை நடத்தும் உத்திகளாகக் கருதுவார் திருவள்ளுவர். திருக்குறளில் கருத்தியல் போர் என்பது நவீன ஊடகத்தில் கார்ட்டூன் என்று அழைக்கப்படும் கேலிப்படங்களை ஒத்தவை. கருத்துப்படங்களாகவும் போற்றுவதுண்டு. திருக்குறளில் தள்ளுபடி, திருக்குறளில் வேகத்தடை எல்லாம் திருக்குறளில் வெளிப்படை, ஊழையும் உப்பக்கம் காண்பார் என்பது, ஊழிற்பெருவலி யாவுள என்ற கருத்தியலோடு போரிடக்கூடிய ஒரு கருத்து. முயற்சி

தன் மெய்வருத்தக் கூலி தரும் என்பது, தெய்வத்தால் ஆகுமா, ஆகாதா, என்ற கருத்தியலோடு போரிடக்கூடிய ஒரு கருத்து. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது இலமென்று அசைஇ இருப்பாரைக்கண்டு / இரப்பாரைக்கண்டு போரிடக்கூடிய ஒரு கருத்து! புகழ் என்ற அதிகாரம் முற்றும் நிலையாமைக்கு எதிராகப் போரிடக்கூடிய ஒரு கருத்துக்கு அரண்வகுப்பது. பேதைமையையும் புல்லறிவாண்மையையும் எதிர்த்துப் போரிடக்கூடிய ஒரு கருத்தை முன்மொழிந்துள்ளது அறிவுடைமை என்ற அதிகாரம்.

பல திருக்குறளுக்குத் தன் உரையை மட்டுமே முதன்மையானதாகவும் முற்றாக முடிவானதாகவும் நம்பியவர் பரிமேலழகர். சில திருக்குறளுக்கு பிறர் உரையை ஒத்துக்காட்டுவதும் உண்டு; சில திருக்குறளுக்கு பிறர் உரையை மறுப்பதுண்டு.

திருவள்ளுவர் பல குறள்களில் தன் கருத்தைமட்டுமே முதன்மையானதாகவும் முற்றாக முடிவானதாகவும் நம்பியவர். அவர் சில குறள்களில் பிறர் கருத்துக்களுக்கு உடன்பட்டும் ஒத்தும் போவதுண்டு; சில திருக்குறளில் பிறர் கருத்துக்களை மறுப்பதுண்டு. பரிமேலழகரும், திருவள்ளுவரின் இந்த அணுகுமுறையைத்தான் தொடக்கமுதல் இறுதிவரை பின்பற்றி உரை வகுத்துள்ளதை அறியமுடிகிறது.

விரதம், ஞானம், இரண்டு உட்பிரிவுகளை வகுத்துக்கொண்டு துறவறவியல் அமைக்கப்பட்டுள்ளதாகப் பரிமேலழகர் உரை அமைகிறது.

விரதங்களைப் பட்டியலிடுவதுடன் விரதங்களை வரையறை செய்வதும் பரிமேலழகரின் முயற்சியில் காணப்படும் உயிர்நிலை.

**இன்னஅறம் செய்வல் என்றும்**
**இன்ன பாவம் ஒழிவல் என்றும்**
**தம்மாற்றலுக்கேற்பவரைந்துகொள்வன**
**என்று விரதத்திற்கு இலக்கு எல்லை வகுத்துள்ளார்.**

வரம்பில்லாத விரதங்களைப் பெருக்கிக் காட்டாமல் சிறப்புடைய சிலவற்றை மட்டுமே கூறுவதாக திருவள்ளுவரின் உள்ளக்கிடக்கையை அடையாளம் காட்டுகிறார் பரிமேலழகர்.

கள்ளாமை

வாய்மை

வெகுளாமை

இன்னாசெய்யாமை

கொல்லாமை —ஆகிய சில விரதங்கள் சான்றாகும்.

சில செய்திகளை ஆணித்தரமாகக் கூறுவதும் நிபந்தனைக்குட்படுத்தி வெளியிடுவதும் வள்ளுவரின் அணுகுமுறையில் அறியப்பட்டவை.

நன்றாற்றலுள்ளும் தவறுண்டு என்று கண்டறிந்து கொள்ளச் சொன்னவர் அவர்; கொன்றன்ன இன்னாசெய்யினும் அவர் செய்தஒன்று நன்றுள்ளக் கெடும் என்று வெளிப்படையாகவே கருத்தறிவித்தவர் வள்ளுவர்.

பொய்மையும் வாய்மையிடத்த என்று தயங்காமல் சொன்னவர் திருவள்ளுவர். புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின் என்றஒரு நிபந்தனையுடன் அந்தக் கருத்தை அரங்கேற்ற முனைந்தவர் வள்ளுவர். செய் நன்றியறிதலைப் பனை தினைகளால் அளந்து மதிப்பிட்ட திருவள்ளுவர் அதே தினைபனைகளைக் கொண்டே குற்றங்களையும் எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறார். ஊடல் கூடல்களின் மதிப்பையும் பயனையும் சுட்ட தினைபனைகளால் கணக்குப் பார்த்த திருவள்ளுவர் ஒழுக்கத்தை மனப்போராட்டத்திலும் கண்டு கொள்ள வேண்டுகிறார்; அப்படியே; வெஃகாமையை மனப்போரிலும் கள்ளாமையைக் களப்போரிலும் எடை போடுகிறார்; பொறாமை பொறுமைகளை மனப்போருக்குரியவையாகவே நிறுத்தியவள்ளுவர் தீவினைஅச்சத்தை மனப்போருக்குள்ளும் வினைத்தூய்மையைக் களப்போருக்கும் உரியவைகளாகக் கண்டு கொண்டார். ஒழுக்கமுடைமைக்கும் பிறனில் விழையாமைக்கும் மனப்போரில் இடமளித்தவள்ளுவர், அருளுடைமையை மனப்போர் என்றும் கண்ணோட்டத்தைக் களப்போர் என்றும் பிரித்துவிட்டார்; பொறைஉடைமையை அலசி ஆராய்வதில் வள்ளுவர் எல்லையில்லாத மனப்போரில் திளைத்துள்ளார் என்று தெரிகிறது.

பெரியார்களிலே முன்னணி பின்னணி என்று பொறை உடைமையைத் துல்லியமாக எடைபோட்டார். பொறுத்தாரை அடையாளம் காட்ட ஒறுத்தாரையும் அடையாளப்படுத்தும் போராட்டம் வள்ளுவருக்குள் மூண்டெழுந்தது. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்கிற உலகைப்பார்த்து பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் என்று ஆணித்தரமான கொள்கையை ஓங்கிச் சொன்னவர் வள்ளுவர்.

பொறுமைக்கு என்றும் வெற்றியுண்டு; அதற்குத் தோல்வியே இராது என்ற உறுதி வள்ளுவர் பொறுமைக் கோட்பாட்டில் உண்டு. ஊடலில் தோற்றவர் வென்றார் என்று முழங்கிய வள்ளுவர் வரம்பு கடந்து மிக்கவை செய்தாரையும் வென்று விடக்கூடியது பொறுமை என்று உரத்துச் சிந்திக்கிறார். துறந்தாரைவிடத் தூய்மைக்கு இடம் கொடுப்பது பொறுமையின் சிகரம்; அது எல்லைமீறிய நடத்தையினால் வெளிப்பட்ட தீயசொற்களைப் பொறுப்பதிலே காண முடியும் என்று பொறுமையின் உச்சநிலையை அடையாளம் காட்டுகிறார். இன்னா செய்தார்க்கு இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்று அறைகூவியவர் வள்ளுவர். இணையில்லாத தாழ்ந்தவர்களிடம் கூடத்தோல்வியை ஒப்புக் கொள்ளும் பண்பாடுதானே பொறையுடைமை என்று சால்பின் உரைகல்லாகப் பொறுமையை அறிவித்தவர் திருவள்ளுவர். கயமையைப் பொறுத்துக் கொண்டவரா வள்ளுவர்? பொறுமைக்கு எல்லையே கிடையாது என்றுபுகழ் மாலை சூட்டி மகிழ்பவர் அவர். கூடாஒழுக்கத்தையும் கூடாநட்பையும் பொறுத்துக் கொண்டாரா? படைச் செருக்கைப் போற்றிய வள்ளுவர் பேராண்மைக்கு இலக்கணம் சொன்ன கையோடு ஊராண்மைக்கு ஒரு வரையறைசெய்தபோது பொறுமைக்கு எல்லைக்கோடு வரைந்துள்ளார்; இன்னாசெய்தாரை ஒறுத்தல் எப்படி? அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்றதோடு இன்னாசெய்தாருக்கும் இனியவே செய்யாக்கால் என்னபயத்ததோ சால்பு (987) என்று வினாவியதன் மூலம் பொறுமைக்கான எல்லைக் கோட்டினைத் துல்லியமாகக் காட்டுகிறார்.

# வாசகர் வாசகம்

அன்புடையீர்,

வணக்கம் பல. தங்கள் சங்கத்தின் திங்கள் இதழான "செந்தமிழ் பத்திரிக்கையில் அண்மையில் வெளிவந்த" சமண சமய நெறிகளும், சித்த மருத்துவமும்' என்னும் அரியதோர் கட்டுரையைப் படிக்கும் வாய்ப்பு கிட்டியது. கட்டுரை ஆசிரியர் இருவரும், சமண 'சமயம் தொடர்பான செய்திகளைத்திரட்டி, பல உண்மைகளைத் தெரிவித்துள்ளனர்.

சமண நெறிகளைப் பின்பற்றுபவன் என்ற முறையில், என் மனமுவந்த நன்றிகளை, கட்டுரை ஆசிரியர் இருவருக்கும், அதை வெளியிட்ட தங்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கட்டுரையின் முதல் பத்தியில் சித்தர்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள், புரிந்துணர்தலின் ஏற்பட்ட பிழையாகக் காணப்படுகிறது. அருகர், சித்தர், ஆசாரியர், உவாத்தியர், சாதுவர் ஆகிய ஐவரும் சமணரால் வணங்கப்படும் ஐம்பெருங்குரவர்கள் ஆவர்.

இவர்களில் சித்தர்கள் என்போர் அருகர் நிலையிலிருந்து, தவம் முதலியவற்றால் எண்வினைகளையும் வென்று, கடவுள் நிலையாகிய முக்திநிலைக்குச் சென்றுவிட்டவர் ஆவர். அஃதே வீடு, அதனையே சித்தர் உலகம் என்பர். அனந்த குணங்கட்கு இருப்பிடமாகிய, உருவிலியாகிய அந்த சித்த ஆன்மாக்கள் திரும்பி இம்மண்ணிற்கு வருவதில்லை.

செந்தமிழ் இதழைப் பற்றிய தங்களது திறனாய்வுகள் வரவேற்கப்படுகின்றன. — ஆசிரியர்

ஆதலின், மருத்துவத் தொண்டு செய்து வந்த சித்தர்கள் சமணம் போற்றும் சித்தர்கள் அல்லர் அப்பெயர் தாங்கிய பலர் மக்கட்கு மருத்துவத் தொண்டு செய்திருக்கக் கூடும். அவர்கள் சமண முனிவர்களாகவும் இருந்திருக்கலாம். அதைக் கட்டுரையின் மற்ற பகுதிகள் சிறப்பாகத் தெரிவிக்கின்றன. இவை, பரவலாகப் பலருக்கும் தெரிவிக்க வேண்டும் என்னும் நோக்கில் தங்கள் பத்திரிகையை எனக்குத் தந்துதவிய என் குருநாதர் மகாவித்துவான் திரு வெ.சிவசுப்பிரமணியனார் அவர்களின் ஆலோசனையின்படி, எமது அருகன் தத்துவ இதழில் நன்றியுடன் வெளியிட்டுள்ளோம். தங்கட்கும் அவ்விதழொன்றை மிகவும் நன்றியுடன் அனுப்பியுள்ளோம். ஏற்க வேண்டுகிறோம். தங்களின் சேவை தொடர்வதாக!

வணக்கம்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள

22-05-08

திருவறக் கவிஞர் புலவர் **தோ.ஜம்புகுமாரன்**
ஆசிரியர், அருகன்தத்துவம்
புழல், சென்னை – 66

13825

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**
**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**
**மதுரை–625001.**
தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 June 2008


## ஆசிரியர் குழு

டாக்டர் திரு. ந. சேதுராமன்

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,